

விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி புத்தகம் வழங்கி வரவேற்றார்.



விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரைக்கு வருகைதந்த கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் புத்தகம் வழங்கி வரவேற்றார்.



கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர் பிரஜித், தான் வரைந்த முதலமைச்சர் அவர்களின் ஓவியத்தை அவரிடம் வழங்க வேண்டும் என்று காணொலி மூலமாக கோரிக்கை விடுத்திருந்தார். அதனைப் பார்த்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அம்மாணவனை நேற்று (7.2.2026) முகாம் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டி, நன்றாக படித்து வாழ்வில் சாதிக்க வேண்டும் என்று வாழ்த்தினார். உடன் அம்மாணவனின் குடும்பத்தினர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி மாநகராட்சி 1வது மண்டல அலுவலகத்தில் நடந்த மாநகராட்சி –நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கான டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை கொண்டு செல்லும் வாகனத்தை கழக பொதுச் செயலாளர், நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில் குமார், ஊராட்சிஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாமன்ற உறுப்பினர்கள் ரவிக்குமார், விமலா சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, பிப்.8-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயலாளர் தமிழக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் கழக ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்னும் முழக்கத்தை ஓங்கி ஒலித்து இந்திய ஒன்றியத்தில் முதன்மை மாநிலமாக முன்னெடுத்து சிறந்த முதலமைச்சராக திகழும் நமது கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு நாளை (09.02.2026) காலை 10.00 மணிக்கு வருகை தருகிறார்.

தமிழகத்தில் வரலாற்று சிறப்புமிக்க திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வர் அவர்களின் நல்லாட்சியில் TATA கார் உற்பத்தி தொழிற்சாலை 470 எக்கர் பரப்பளவில் இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டையில் 35000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முன்னனி கார் உற்பத்தி நிறுவனம்



TATA மோட்டாரின் (J.L.R) உலக முன்னனி கார் உற்பத்தி துவக்கி வைக்க நமது மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழக முதல்வர் - கழக தலைவர் தளபதி அவர்களுக்கு பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டை நுழைவு வாயிலில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

வரலாற்று தலைவர் தளபதி அவர்கள் "கோபாலபுரம் இளைஞர் தி.மு.க." ஆரம்பித்து மாநில இளைஞர் அணி குழுவில் இடம் பெற்று மாநில இளைஞர் அணி செயலாளராக, கழக துணை பொது செயலாளராக, கழக பொருளாளராக, சென்னை மாநகர மேயராக, தமிழக உள்ளாட்சி துறை அமைச்சராக, தமிழக துணை முதலமைச்சராக, கழக தலைவராக தமிழக பொது மக்கள் ஆதரவோடு தமிழக முதல்வராக பொறுப்பு வகித்து பொறுப்புகளுக்கு பெருமையை தேடி தந்தவர் தலைவர் தளபதி ஆவார்.

தமிழகத்தில் பொற்கால ஆட்சியை நடத்தி மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, மகளிர் உரிமைத் தொகை, பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வி, புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், தமிழ்ப் புதல்வன் திட்டம், தாயுமானவர் திட்டம், மக்களுடன் முதல்வர் ஆகிய வரலாற்றுத் திட்டங்களை செயல்படுத்தும் திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாய் மாநில முதல்வர்களில் முதல் முதல்வராய் சிறந்து விளங்கும் தலைவர் தளபதி அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது நமது தலையாய கடமையாகும்.

எனவே, தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு அளிக்கப்படும் வரலாற்று சிறப்புமிக்க வரவேற்பு நாளை (09.02.2026) திங்கள் கிழமை காலை 9.00 மணிக்கு பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டை நுழைவு வாயிலில் எனது தலைமையில் அளிக்கப்பட உள்ளது.

மாவட்ட நிர்வாகிகள் நகர, ஒன்றிய செயலாளர்கள், நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட அணியின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், ஊர் கிளை, உட்கிளை, வட்ட கிளை நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளரணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொ.மு.ச. ஆகிய அனைத்து அணியினரும் கழக தோழர்களும் மேற்கண்ட நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்புற அமைய ஒத்துழைப்பு நல்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பழம்பெரும் நடிகை திருமதி எம்,என், ராஜம் – மூத்த இயக்குனர் எஸ்,பி, முத்துராமன் பெறுகின்றனர்!

# 2024,2025 ஆம் ஆண்டிற்கான 'கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்' விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, பிப்.8-**

**பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் மற்றும் மூத்த இயக்குனர் எஸ்.பி. முத்துராமன் ஆகியோருக்கு 2024, 2025 ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது அறிவிப்பு வெளியிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**





தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கும் வாழ்நாள் சாதனையாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்படும் எனச் சட்டமன்றப் பேரவையில் 27.4.2022 அன்று செய்தித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளரான ஆரூர்தாஸ் அவர்களுக்கும்,

2023 ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாக 2023ஆம் ஆண்டுக்கு மட்டும் கூடுதலாக கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

**2024-ஆம்ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது திருமதி.எம்.என்.ராஜம் தேர்வு**

தமிழ் திரையுலகின் பழம்பெரும் நடிகைகளில் ஒருவரான நடிகை எம்.என். ராஜம் , சிறு வயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கி, 1949இல் குழந்தை நட்சத்திரமாக திரைப்படங்களில் அறிமுகமான இவர், 1950கள் மற்றும் 1960 களில் முன்னணி நாயகியாக விளங்கினார். ரத்தக் கண்ணீர், பெண்ணின் பெருமை, புதையல், தங்கப்பதுமை, நாடோடி மன்னன், பாசமலர், தாலி பாக்கியம், மங்கையர் திலகம் போன்ற பல்வேறு வெற்றிப்படங்களில் நடித்து ரசிகர்களின் அன்பைப் பெற்றார். 200க்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்த இவர், பின்னர் தாயார், மாமியார் போன்ற பல்வேறு துணை வேடங்களிலும் சிறப்பாக நடித்து மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர்.

. அரங்கேற்றம், ஊருக்கு உழைப்பவன், போன்ற படங்களில் அவர் ஏற்ற அன்னை வேடங்கள் மறக்க முடியாதவை. தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முதல் பெண் உறுப்பினராகவும் பதிவான திருமதி எம் என் ராஜம் , தனது நீண்டகால கலைச் சேவைக்காக பல விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

இத்தகைய பெருமைக்குரிய பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**2025-ஆம்ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது முதுபெரும் திரைப்படஇயக்குநர் எஸ்.பி. முத்துராமன் தேர்வு**

எஸ். பி. முத்துராமன் பிரபலமாக எஸ். பி.எம். என்று அழைக்கப்படுபவர், தமிழ்த் திரைப்படத் துறையின் மூத்த இயக்குநர்களில் ஒருவராவார். 1935 ஏப்ரல் 7-ஆம் தேதி காரைக்குடியில் பிறந்த இவர், 1960-இல் களத்தூர் கண்ணம்மா படத்தில் உதவி இயக்குநராகத் தொடங்கி, பின்னர் 1970கள் முதல் 1990கள் வரை தமிழ் சினிமாவில் மிகவும் வெற்றிகரமான வணிக இயக்குநராக உயர்ந்தார்.

70-க்கும் மேற்பட்ட தமிழ்ப் படங்களை இயக்கியுள்ளார்.

இவரது சிறந்த படங்களில் ஆறிலிருந்து அறுபது வரை, புவனா ஒரு கேள்விக் குறி (1977), ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது (1978), முரட்டுக் காளை, எங்கேயோ கேட்ட குரல் (1982), சகலகலா வல்லவன் (1985) போன்றவை முக்கிய மானவை. தமிழ் திரைப்படத் துறைக்கு அளித்த பங்களிப்புகளுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

எளிமை, நேர்மை, பணிவு ஆகியவற்றுக்கு பெயர் பெற்ற இவர், தமிழ் சினிமாவின் வணிக வெற்றியை தீர்மானித்த மிக முக்கிய இயக்குநர்களில் ஒருவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

கலைத்துறையில் திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் அவர்களின் சிறந்த பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, இவர் 2025ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பழம்பெரும் நடிகை திருமதி.எம். என்.ராஜம், திரைப்பட இயக்குனர் எஸ்.பி. முத்துராமன் ஆகிய இருவருக்கும்

முதலமைச்சர் அவர்களால் ரொக்கப் பரிசாக தலா 10 இலட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.



இந்தோனேஷிய நாட்டின் பாத்தாம் நகரில் கழக அயலக அணி சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி கழக இந்தோனேஷிய கழக செயற்பாட்டாளர் திராவிட மணி ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்வில் கழக வழக்கறிஞர் வீ.கண்ணதாசன், சிங்கப்பூர் கழக அயலக அணி துணைத்தலைவர் பெ.சந்திரசேகர் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.



சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட மக்களிடம் கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கருத்துக்களை கேட்டு மனுக்கள் பெற்றார். உடன் கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் இரா. இராஜேந்திரன், கோவி. செழியன், மதி வேந்தன், அயலக அணி செயலாளர் அப்துல்லா,நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், டி.எம். செல்வகணபதி, கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் இருந்தனர்.